## தலைப்பு 267 –முல்லைத்தீவு மாவட்ட செயலகம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியான அபிப்பிராயம்

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசியகணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசியகணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)பிரிவின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டசெயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2020மே30 இல் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்டிருந்தது. தேசியகணக்காய்வு அதிகாரச்சட்டத்தின்11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 அக்டோபர் 20 இல் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசியகணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முல்லைத்தீவு மாவட்டசெயலகத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாகஏற்றுக்கொள்ளப்பட்டகணக்கீட்டுகோட்பாடுகளுக்குஅமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்

கூற்று இன்றிநிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடியவகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினைதீர்மானித்தல் கணக்கீட்டுஉத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்கதேசியகணக்காய்வுஅதிகாரச்சட்டத்தின் 16(1)பிரிவின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டசெயலகத்தினால் வருடாந்தமற்றும் உரியநேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமானவகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாககாலத்திற்குகாலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான ஏதாயினும் மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாககணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையானதவறான கூற்றுக்களின் இல்லாமைஎன்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையானதவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந் நிதிக்கூற்றுக்களைஅடிப்படையாகக் கொண்டுபயன்படுத்துவோரால் பொருளதாரதீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படைமற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வுசெய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமானகணக்காய்வுநடைமுறைகளைதிட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளககட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்கு உள்ளகக் கட்டுப்பாடுகளின்விளக்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆயினும் இவை மாவட்ட செயலகத்தின் வினைத்திறமையான உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிரயாயத்தினை தெரிவிப்பதற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புமற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானமற்றும் நியாயமானவகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாகநிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புமற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக
கணக்காய்வின் போது அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட அந்தக் கட்டுப்பாட்டின் குறைபாடு உட்பட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்காய்வு உத்தியோகத்தருக்கு நான் தெரியப்படுத்தியிருந்தேன்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் மீதானஅறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவுமற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிககூற்றுக்கள் முன்னையஆண்டுடன் இணங்குவதாகவும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் தொகைகளுடன் ஒப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மாவட்ட செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 பொருண்மையான கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) வருமானங்களின் பெறுவனவு

மாவட்ட செயலகத்திற்குரிய வருமானங்களை கணக்கீடு செய்யும் போதுகீழே காட்டப்பட்டுள்ள குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மாவட்ட செயலகத்திற்குரித்தானதாக காட்டப்பட்டிருந்த அரச உத்தியோகத்தர்களுக்கான இல்லங்கள் மற்றும் விடுதிகள் என்பவற்றிலிருந்து அறவீடு செய்யப்பட்டிருந்த வாடகை வருமானங்களின் கூட்டுமொத்த தொகை ரூபா 846,136 நிதிக்கூற்றுக்களின் படிவம் ஏசீஏ-1 இல் காட்டப்பட்டிருக்காது விடுபட்டிருந்தது. | மாவட்ட செயலகத்திற்குரித்தான வாடகை வருமானத்தினை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

#### (ஆ) மீண்டெழும் செலவினங்கள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய மீண்டெழும் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுஅவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த சம்பளம், கூலி மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் தொடர்பில் திறைசேரிப் புத்தகங்களில் கூட்டுமொத்தம் ரூபா 162,924,486 எனவும் நிதிச் செயலாற்றுகைக்கூற்றில் கூட்டுமொத்தம் ரூபா 162,707,416 எனவும் காட்டப்பட்டிருந்தமை தொடர்பில் கூட்டுமொத்தம் ரூபா 217,070 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வேறுபாட்டுக்கான காரணத்தினை கண்டறிந்துசீராக்கப்படுவதற்குரியநடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

**(இ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதிகள்**

மேற்படி விடயம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதவி வறிதாக்கப்பட்ட, சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்த, பதவியினை விட்டுச் சென்றிருந்த, இறந்த அலுவலர்களது பதவியினர் கடன் நிலுவைகளின் கூட்டு மொத்தம் ரூபா 555,632 இனை தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரிவு 4 இன் பிரகாரம் அறவிட்டுக் கொள்வதற்கு கடந்த 04 தொடக்கம் 26 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இத்தகைய பதவியினர் கடன் நிலுவைகளை அறவிட்டுக் கொள்வதற்கு அன்றேல் உரிய அனுமதி பெறப்பட்டு பதிவழிப்பதற்குரிய நடவடிக்கைகள் உரிய காலத்தில் எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

**(ஈ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

முல்லைத்தீவுமாவட்ட செயலகத்தில் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. விபரம் வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(i)** | **நிலையான சொத்துப் பதிவேடு** | | |
| | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 502(2) இன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை பராமரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| **(ii)** | **கணினி உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு** | | |
| | 2002 நொவெம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணினி உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான | கணினி உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை பராமரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | |
| **(iii)** | **உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு** | | |
| | நிதிப் பிரமாணம் 845(1) பிரகாரம் உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேட்டினை பராமரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| **(iv)** | **பிணைகள் பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிணைகள் பதிவேட்டினை பராமரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| **(v)** | **மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | மின்சார உபகரணங்கள் தொடர்பானபதிவேட்டினை பராமரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| **(vi)** | **நட்டங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நிதிப் பிரமாணம் 110 பிரகாரம்நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் பதிவேட்டினை பராமரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| **(vii)** | **பெறுகைகள் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் வருகைப் பதிவேடு** | | |
| | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டிக்கமைய குழுவின் செயலாளரால் வருகைப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | இக் குழுக்கூட்டங்களுக்கான வருகைப் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

**(viii) கேள்வி கோரல் பதிவேடு**

| | | |
|---|---|---|
| அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டிக்கமைய கேள்வி கோரல் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | கேள்வி கோரல் பதிவேடு பராமரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

**(உ) சுற்றறிக்கைகளுடன் இணங்காமை**

சுற்றறிக்கைகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **சுற்றறிக்கைளுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** | | |
| | **ரூபா** | | | |
| **அரச நிர்வாகச் சுற்றறிக்கை** | | | | |
| 11 யூன் 1999 ஆம் திகதிய 14/99 ஆம் இலக்கம் | 516,000 | மீளாய்வாண்டில் நேர்மையுடன் செய்யும் பிரகடனம் பெறப்பட்டிராது 04 அலுவலர்களுக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினால் இடர்கடன் செலுத்தப்பட்டிருந்தது. | நேர்மையுடன் செய்யும் பிரகடனத்தினை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் பெறப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| 30 ஆகஸ்ட் 1988ஆம் திகதிய 29/88 ஆம் இலக்கம் | 916,483 | பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் சம்மதம் பெறப்பட்டிருக்காது 34 அலுவலர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த இருவருடக் கடன்கள் தொடர்ந்தும் நிலுவையாகக் காணப்படுகின்றது. | பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் சம்மதம் பெறப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டினுள் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் திறைசேரியால் கட்டுநிதி வழங்கப்படாமையினால் கூட்டுமொத்தம் ரூபா 14,510,038 நிதி ஏற்பாட்டினை மாவட்ட செயலகத்தின் கட்டடப் புனரமைப்பு, தளபாட அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கொள்வனவு மற்றும் கட்டடங்கள் நிர்மாண வேலைகளுக்குப் பயன்படுத்தமுடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதி ஒதுக்கீடுகளுக்குரிய கட்டுநிதிகளை காலக்கிரமத்தில் பெறப்பட்டு குறித்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்குரியஆக்கபூர்வ மான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

### 2.2 செலவின முகாமைத்துவம்

வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரித்தல், நிதி ஏற்பாடுகளை மாற்றலும் பெற்றுக் கொள்ளல் மற்றும் பயன்படுத்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகம் மற்றும் ஆறு பிரதேச செயலகங்களின் மூலதன செலவினங்களுக்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளின் கூட்டுமொத்தம் ரூபா 245 மில்லியனில் 24 செப்தெம்பர் 2019 ஆம் திகதிய 5/2019 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைக்கமைவாக சேமிக்கப்பட்டிருக்க வேண்டிய மூலதனச் செலவினத்திற்கான மொத்தத் தேறிய ஏற்பாட்டில் 25 சதவீதம் அல்லது கூட்டுமொத்தம் ரூபா 61.25 மில்லியன் தவிர 60 சதவீதம் அல்லது கூட்டுமொத்தம் ரூபா 148.58 மில்லியன் பெறுமதியான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாதிருந்தது. இவற்றுள் மீளாய்வாண்டின் சனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் மாவட்ட செயலகத்தின் கட்டடநிர்மாண வேலைகள் (படிநிலை –II) இற்காக கூட்டுமொத்தம் ரூபா 190 மில்லியன் | நிதி ஒதுக்கீடுகளை பயன்மிக்க வகையில் உபயோகப்படுத்தப்படுவத ற்குஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இது விடயம் தொடர்பில் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அமைச்சினால் கோரப்பட்டிருந்த விலைமனுக்கோரல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடு என்பவற்றிலேற்பட்டிருந்த காலதாமதத்தினால் அந் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது 24 செப்தெம்பர் 2019 ஆம் திகதிய 5/2019 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கைக்கமைவாக எனக் குறிப்பிடப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | | |
| (ஆ) மீளாய்வாண்டில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தினால் பயிற்சியளித்தலும் இயலளவினை கட்டியெழுப்புதலும் செலவின விடயத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த பொறுப்பு ரூபா 72,150 நடப்பாண்டில் அதற்கென ரூபா 30,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தும் மேற்படி பொறுப்புகள் எவையும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காது செலவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் உரிய காலத்தில் எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

---

பல்வேறு பணிகளுக்காக 30 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் ரூபா 4,046 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்படடிருந்ததுடன், அந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 2,909.50 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 1,136.5 மில்லியன் பெறுமதியான 28 சதவீதமான தொகை மீளாய்வாண்டில் பயன்படுத்தப்படாமலிருந்துள்ளது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பல்வேறுபட்ட அபிவிருத்தி வேலைகளுக்காக சனாதிபதி செயலகம், ஆறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களமொன்றினால் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி வேலைகள் | உண்மையாகவே பௌதீக வேலைகள் முழுமைப்படுத்தப்பட்ட அளவுக்கு வேலைகள் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அவற்றின் கொடுக்க | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| உரியவாறு நிறைவேற்றப்பட்டிருக்காது அவை பூரணப்படுத்தப்பட்டதாக அத்தாட்சிப்படுத்தப்பட்டு கொடுப்பனவுச் சிட்டைகள் தயாரிக்கப்பட்டு கூட்டுமொத்தம் ரூபா 786.15 மில்லியன் பொறுப்புக்கள் கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வேண்டிய பெறுமதியளவுக்கு பொறுப்புக்களின் கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | |

**2.4 முற்பணக் கொடுப்பனவும் தீர்ப்பனவும்**

முற்பணக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்பு வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சனாதிபதி தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட பணியாட் தொகுதியினருக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக மாவட்ட செயலகத்தினால் தேர்தல்கள் அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டிருந்த உப கட்டுநிதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,286,625 தீர்ப்பனவு செய்யப்படாதிருந்தது. | உரிய காலத்தில் உபகட்டுநிதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

**2.5 வைப்பு மீதிகள்**

வைப்பு மீதிகள் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகம் மற்றும் ஏனைய ஆறு பிரதேச செயலகங்களின் 170 குறித்த நோக்கங்களுக்கான வைப்புக்கள், 38 பிடி பண வைப்புக்கள், 06 மீளளிக்கத்தக்க கேள்வி வைப்புக்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது வைப்புக்களின் கூட்டுமொத்தமான ரூபா 18,724,083 கடந்த 03 மாதங்கள் தொடக்கம் 05 ஆண்டுகளாக பொது வைப்புக் கணக்கில் தேக்கிவைக்கப்பட்டிருந்தன. | காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

**2.6 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துதல்**

வங்கி கணக்குகளை செயற்படுத்துதல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396 இற்கு முரணாக கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக வங்கிக்கு கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத காசோலைகளின் கூட்டுமொத்தம் ரூபா 21,200 தொடர்பில் இரு பிரதேச செயலகங்களினால் நாளதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கி கொடுப்பனவுக்காக சமர்க்கப்பட்டிராத காசோலைகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க மாவட்ட செயலகத்தினால் கடந்த 05 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டிலிருந்து தயாரிக்கநடவடிக்கை எடுக்கப்படும். |

**3.1.2 செயற்றிட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டு எடுக்கப்பட்டிருந்த தீர்மானங்களிற்கமைவாக நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய 08 செயற்றிட்டங்கள் நாளதுவரை | தீர்மானத்திற்கமைவாக அச் செயற்றிட்டங்கள் உரிய காலத்தினுள் நிறைவேற்றப்படுவதற்கு ஆக்கபூர்வமான | பதில் வழங்கப்படவில்லை. |

| | |
|---|---|
| நிறைவேற்றப்பட்டிருக்காமை மற்றும் தொடர் நடவடிக்கைகளில் நலிவுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. | பின் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உலக உணவுத்திட்டத்திற்குரிய களஞ்சியத்தில் 66 வகையான இருப்புக்கள் எவ்விதமான பதிவேடுகளுமின்றி கடந்த 03 தொடக்கம் 08 வருடங்களுக்கு மேலாக பயன்பாடின்றி காணப்படுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | பதிவேட்டிற்குட்படுத்தி பயன்படுத்துதல் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | 2020ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 07 அலுவலக பிக்கப்கள், மற்றும் இரு லொறிகள், 06 மோட்டார் சைக்கிள்கள் என்பன கடந்த 01 தொடக்கம் 06 வருடங்களாக உரிய பராமரிப்புக்கள், திருத்தங்களின்றி முறையே மாவட்ட செயலகத்தின் களஞ்சிய சாலை, உலக உணவுத்திட்டத்திற்கான களஞ்சிய சாலை என்பவற்றில் விடப்பட்டிருந்தன. | திருத்தம் செய்து பராமரிப்பதற்குரிய நடவடிக்கைகள் உரிய காலத்தினுள் எடுக்கப்படல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (இ) | மாவட்ட செயலக வளாகத்தினுள் ஐந்து ஆண்டுகளாக WPRB 2647 எனும் பதிவு இலக்கத்தினையுடைய உழவியந்திரம் ஒன்று பாவனையின்றி விடப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இதன் உரிமை மாவட்டச் செயலகத்திற்குரியதாக விருக்கவில்லை. | உரிமைத் தன்மையினை அடையாளம் கண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஈ) | அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட மின் பிறப்பாக்கி கடந்த 04 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டிராது மாவட்ட செயலக வளாகத்தில் விடப்பட்டிருந்த அதே வேளை தேவைப்படும் சராசரி மாதாந்த மின்நுகர்வு இயலளவிற்கு அதிகமான மின் சக்தி வலுவுடைய (502 கிலோவாற்று) புதிய மின் பிறப்பாக்கியொன்று ரூபா9.80 மில்லியனிற்கு மாவட்ட செயலகத்தினால் துருக்கி நாட்டிலிருந்து சர்வதேச போட்டி விலைக்கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்காது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | வினைத்திறன்மிக்க பொறிமுறை ஏற்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படுவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் உரிய காலத்தினுள் எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 3.3 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (Gamperaliya), கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (RIDP), கிராம அபிவிருத்தி திட்டம் (REEP), அபிவிருத்தி உதவித் திட்டம் (DCB), மற்றும் உட்கட்டுமான வேலைத்திட்டம் (TFR) திட்டங்களுக்குரிய 19 வேலைத்திட்டங்கள் பூரணமாக நிறைவு செய்யப்பட்டிராமல் குறித்த வேலைகள் நிறைவுசெய்யப்பட்டதாக முறையற்ற விதத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களாக கூட்டுமொத்தம் ரூபா 19,143,771 காட்டப்பட்டிருந்தமை கணக்காய்வுப் பரிசீலனையில் அவதானிக்கப்பட்டிருந்தது. | வேலைகள் நிறைவேற்றப்பட்டு அதனடிப்படையில் வேலைகள் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சிட்டைகளுக்கே பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 3.4 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அலுவலக வாகனங்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த பல்வேறுபட்ட விபத்துக்கள் தொடர்பில் அவற்றின் சேதங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்காத 07 சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. | ஒவ்வொரு விபத்துக்களின் போதும் ஏற்படுத்தப்பட்ட இழப்புக்களின், சேதங்களின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

### 3.5 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாவட்ட செயலகத்தின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் 12 கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் கடந்த 01 மாதம் தொடக்கம் 03 ஆண்டுகளாக கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. | உரிய காலப்பகுதியில் கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய பதில்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

## 4. நிலைபேறானநோக்கங்களைஅடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒவ்வொருஅரசாங்கநிறுவனமும்நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் ஐக்கியநாடுகளிற்கான 230 நிகழ்ச்சிநிரலிற்கு இணங்கவும் 2017 அக்டோபர் 03 ஆம் திகதிய 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரசட்டத்தை பின்பற்றியும் செயற்படவேண்டியதுடன் சுற்றறிக்கைகள் மூலம் மேற்படி விடயம் தொடர்பாக அனைத்து அரசாங்க நிறுவனங்களினாலும் அறிந்துகொள்ளப்பட்டிருந்தன. அதற்கிணங்க அனைத்து அரசாங்க நிறுவனங்களும் உரிய நிறுவனத்தின் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாகஎவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிந்திருக்க வேண்டிய போதிலும் மாவட்ட செயலகம் மேற்படி விடயத்தை அறிந்திருக்காததால் இதன் தொழிற்பாடுகள் தொடர்பான நோக்கங்கள்,இலக்குகள் மற்றும் இவ் இலக்குகளை அடைந்து கொள்வதை அளவிடுவதற்கு தேவையான சுட்டிகள் என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு சுற்றறிக்கைகளில் கூறப்பட்டவாறு திட்டங்களைத் தயாரித்து தொழிற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைஎடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 5. நல்லாளுகை

### 5.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் 04 பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பொதுமக்கள்/சேவை பெறுநர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 33 வீட்டுத்திட்ட முறைப்பாடுகள் தொடர்பான புலனாய்வு விசாரணை அறிக்கைகள் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தபோதிலும் இம் | பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவை தொடர்பில் அவர்களுக்கு உரிய மொழியில் உரிய காலத்தினுள் அறியக் கொடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

முறைப்பாட்டு விசாரணை அறிக்கைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த நடவடிக்கைகள் மற்றும் அவை தொடர்பில் முறைப்பாட்டாளருக்கு அறியக்கொடுக்கப்பட்டிராமை, அவற்றின் மீது அசமந்தம் /அலட்சியப்போக்குகள் என்பன கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் முல்லைத்தீவு மாவட்டத்தின் செயலாளருக்கு பொதுமக்களாகிய சேவைபெறுனர்களால் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் மீது அவர்களுக்கு 20 மே 2015 ஆம் திகதிய 11/2015 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பந்தி 03 இற்கு அமைவாக அறியக் கொடுக்கப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 6. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தவாறு முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் ஆறு பிரதேச செயலகங்களுக்குரிய நான்கு வகையான பதவிகளுக்குரிய 34 பதவியணியினரை ஆட்சேர்ப்பித்து இணைத்துக் கொள்ளாமையினால் அத்தகைய பதவிகளுக்குரிய கடமைகளை நிறைவேற்ற முடியாமை, நிறைவேற்றலில் காலதாமதங்கள், நலிவு நிலைமைகள் என்பன கணக்காய்வில் அவதானிக்கப் பட்டன. எவ்வாறாயினும் கடந்த 10 ஆண்டுகளாக மேற்படி பதவியணிகள் வெற்றிடமாக விடப்பட்டிருந்தன. | பதவியணியினர் வெற்றிடங்களை உரிய காலத்தில் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஆ) | அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களினை பரவலாக்கலில் முல்லைத்தீவு மாவட்டசெயலகம் | பிரதேச செயலகங்களுக்கிடையே ஆளணியினரை பரவலாக்கப்படுவதற்குரிய | பதில் வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | சேவையின் தன்மை, வெற்றிடத்தின் விகிதாசாரப்போக்கு என்பனவற்றை கருத்திற் கொள்ளாது நகர பகுதிகளிலுள்ள மாவட்டசெயலகம், கரைத்துறைபற்று பிரதேச செயலகம் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகங்களுக்கு அப் பதவியணியனிரை பரவலாக்கியிருந்தமையால் இச் செயலகங்களில் மேற்படி பதவிகளுக்கான வெற்றிடங்கள் 01 சதவீதம் தொடக்கம் 48 சதவீதம் வரையிலும் அவற்றினை யொத்ததான பதவியினர் வெற்றிடங்கள் நகரப் புறத்திலிருந்து தொலைதுாரத்திலுள்ள வெலிஓயா, துணுக்காய், மாந்தைகிழக்கு மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச மக்களுக்குரிய சேவை வழங்கலுக்கான மேற்படி முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடங்கள் பரவலாக்கப்பட்டிருக்காது 56 சதவீதம் தொடக்கம் 65 சதவீதம் வரையில் வெற்றிடமாக்கப்பட்டுள்ளன. | ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் உரிய காலத்தினுள் எடுக்கப்படல் வேண்டும். | |
| (இ) | இலங்கை நிர்வாக சேவை தரத்திலான உத்தியோகத்த ரொருவரினால் முன்னெடுக்கப்பட வேண்டிய இம் மாவட்டத்திற்கான மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் கடமைகள் யாவும் கடந்த 04 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை திட்டமிடல் சேவை தரத்தினையுடைய உத்தியோகத்தரொருவரினது பதில் கடமை மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இம் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட இலங்கை திட்டமிடல் சேவை தரத்திலான உத்தியோகத்தர்களுக்குரிய கடமைகளுக்கு வேண்டிய ஆளணியினரிலும் 08எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் காணப்படுகின்றமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியினை சேர்ந்த உத்தியோகத்தர்களினை சம்பந்தப்பட்ட தொடர்புடைய பதவிகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டு சேவை வழங்குவதற்கு நடவடிக்கைஎடுக்கப்படல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |